Registered as a Newspaper விலை ரூபா 5-00

# ஈழநாதம்

The Eelanaatham மக்கள் தினசரி Peoples Daily

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 7 21 - 05 - 1994 சனிக்கிழமை ஓசை 92

## கல்வித்திணைக்கள ஊழியர் இடமாற்றம் அமைச்சின் பொறுப்பு

எழுதுவினைஞர், அலுவலகப் பணியாளர் மற்றும் ஆசிரியர் அல்லாத பாடசாலை ஊழியர்களையும் இடமாற்றம் செய்வது மாகாண அமைச்சினால் மாத்திரமே செய்யப்படல் வேண்டும். இவ்வாறு தெரிவிக்கும் சுற்று நிருபம் ஒன்று வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர் சடாட்சர சண்முகதாசினால் சகல பிரதேச கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் ஆளணி புள்ளி விபரங்களைக் கட்டுப்படுத்தி பேணுவதற்கு வசதியாகவே இவ்வாறு இடமாற்றங்கள் அமைச்சினால் மட்டுமே செய்யப்பட வேண்டும் என்று மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே மாகாணத்திலுள்ள

[6ஆம் பக்கம் பார்க்க]

# சமூக அநீதியாக உருவெடுத்துள்ள சீதனக் கொடுமையை ஒழித்துக்கட்ட மக்கள் கைகொடுத்து உதவ வேண்டும்

### தமிழீழ விடுதலைப்புலிகள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ சமூகத்தில், சீதன முறையானது பெண் அடிமைத்தனத்தின் வெளிப்பாடாக ஒரு சமூக அநீதியாக உருவெடுத்திருக்கிறது இந்தக் கொடுமையால் பெண்ணினம் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது. பெண்கள் மட்டுமன்றி, பெண்களைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் உள்ளடங்கியதாக எண்ணற்ற குடும்பங்கள் இப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் கொடுமையை ஒழித்துக்கட்ட விடுதலைப்புலிகள் இயக்கம் முடிவெடுத்திருக்கிறது. இந்த நோக்கில், சீதன ஒழிப்பு சட்டம் ஒன்றைத் தயாரித்து, அதனை செம்மையாக செயல்படுத்தவும் புலிகள் இயக்கம் தீர்மானித்துள்ளது.

இது குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியற்துறையினர் விடுத்துள்ள அறிக்கையின் முழுவிபரமும் வருமாறு:

தமிழீழ மக்கள் மத்தியில் ஒரு பாரிய சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ள சீதனக் கொடுமையை ஒழித்துக்கட்ட விடுதலைப்புலிகள் இயக்கம் முடிவெடுத்திருக்கிறது. இந்த நோக்கில், சீதன ஒழிப்புச்சட்டம் ஒன்றைத் தயாரித்து, அதனை செம்மையாக செயல்படுத்தவும் புலிகள் இயக்கம் தீர்மானித்திருக்கிறது.

சீதன ஒழிப்பிற்கான சட்ட வாக்கம், மற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர், இந்தச் சிக்கலான பிரச்சினை குறித்து மக்களுடன் கலந்தாலோசனை நிகழ்த்தி, மக்களின் கருத்துக்களை கணிப்பெடுக்கும் நோக்குடன் வெகுசனப் பிரசார இயக்கம் ஒன்றையும் விடுதலைப்புலிகள் ஆரம்பித்துள்ளனர். சீதனப் பிரச்சினையின தன்மைகள், அதனை ஒழித்துக்கட்டுவதற்கான வழிமுறைகள், சீதன ஒழிப்புச் சட்டத்தில் எழக்கூடிய சிக்கல்கள் அவற்றை எதிர்கொள்ளும் மார்க்கங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து, மக்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெறும் நோக்குடனேயே இந்தப் பிரசார இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஒட்டுமொத்தத்தில், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் வென்றெடுத்து, சீதனக் கொடுமையை ஒழித்துக்கட்ட நடவடிக்கைகளை

(6ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய-இலங்கை ஒப்பந்த அடிப்படையில் இனப்பிரச்சினை தீர்க்க அரசு யோசனை

## திட்டத்தின் பின்னணியில் காமினிதிசாநாயக்கா

(கொழும்பு)

இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஆலோசனை செய்து வருவதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது ஜனாதிபதியின் இவ்யோசனைக்கு காமினி திசாநாயக்கா பின்னணியில் இருப்பதாக

## இராணுவத்தளபதி ஜெரிடிசில்வாவை ஓரம்கட்ட அரசாங்கம் முயற்சி

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வாவை ஓரங்கட்டும் நடவடிக்கைகள்

...டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவையும் நீக்கிவிட்டு இப்பதவிக்கு முன்

...சிகள் நடப்பதாகவும் ராவய குறிப்பிட்டுள்ளது.

ஜெரி டி சில்வாவை நீக்கும் முயற்சிக்கு வட - கிழக்கு

# இனப்பிரச்சினை தீர்க்க அரசு யோசனை

## திட்டத்தின் பின்னணியில் காமினிதிசாநாயக்கா

(கொழும்பு)

**இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஆலோசனை. செய்து வருவதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது ஜனாதிபதியின் இவ் யோசனைக்கு காமினி திசாநாயக்கா பின்னணியில் இருப்பதாகவும் அவ் வட்டாரங்களில் இருந்து மேலும் அறிய வருகின்றது.**

டி பி விஜேதுங்காவின் இவ் ஆலோசனை பற்றிகொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள வாரப் பத்திரிகை ஒன்று இச் செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை பிடித்துத்தருமாறு அடுத்த சில மாதங்களில் இந்தியாவைக் கோருவதற்கான முயற்சிகளை மேற் கொள்ளவுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் கூறுகின்றன.

இவ் விடயங்கள் தொடர்பாக தற்போது பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான முயற்சியாகவே இம் முடிவுக்கு ஜனாதிபதி டி பி விஜேதுங்கா வந்துள்ளதாகவும் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்த தூதுவராலய அதிகாரி ஒருவருடன் இது தொடர்பாக கருத்துப் பரிமாறப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் காமினி திசாநாயக்காவிற்கு விரைவில் அமைச்சர் பதவி கிடைக்கப் பெற்றதும் இம் முயற்சிகள் மேலும் தீவிரமாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பிரதமர் பதவி ரணிலிடம் விரைவில் பறிக்கப்படலாம்

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கா பிரதமர் பதவியில் இருந்து நீக்கப் படவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாக 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேசமயம் பிரதமர் பதவிக்கு காமினி திசாநாயக்கா நியமிக்கப்பட இருப்பதாகவும் இதனைத் தொடர்ந்து மேலும் பல அமைச்சர்கள் தமது பதவியை இழப்பார்கள் எனவும் மேலும் தெரிய வருகின்றது

சுகாதார அமைச்சர் ரேணுகா கேரத், மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி அத்துகோரள ஆகியோர் உட்பட காமினியின் வருகையை எதிர்த்தவர் பலரிடம் இருந்து மேற்படி மந்திரி பதவிகள் பறிக்கப்பட இருப்பதாக மேலும் தெரிய வருகின்றது.

மேலும் காமினி திசாநாயக்காவை மீண்டும் பாராளுமன்றத்திற்கு கொண்டு வருவது தொடர்பாக ரணில் எதிர்புத் தெரிவித்ததாகவும், எனவே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆர். - ரணில் சந்திப்பு எதிர்காலம்குறித்து ஆராய்வு

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் கடந்த சில தினங்களாக சந்தித்து விரிவான பேச்சுக்களை நடத்தியுள்ளதாகதெரிவிக்கப் படுகிறது.

காமினி திசாநாயக்காவின் வருகையைத் தொடர்ந்து தனது எதிர்கால அரசியல் நிலை குறித்து ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுடன் விரிவாக ஆராயப்பட்டதாக மேலும்தெரியவருகிறது,

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும்என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## ரணிலுக்கு பாதுகாப்பு பெருமளவு குறைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவிற்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த பிரதமருக்கான உயர் பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளதாகவும் இரகசியப் பொலிஸ் பொறுப்பதிகாரி புஞ்சிபண்டா செனவிரட்ண தலைமையில் செயற்படும் பிரிவொன்று இவரின் பாதுகாப்பிற்காக புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கம்பஹா மாவட்ட ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்களை காமினி திசாநாயக்கா சந்தித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## டி.பிக்கு நெருக்கமானவரை பின்தொடரும் இருவர்

### திலக் மாரப்பனவுக்கு அதிக பாதுகாப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி விஜேதுங்காவிற்கு மிக நெருக்கமானவரும் அவருக்கு முக்கியகடமைகளில் உதவுபவருமானசட்டத்தரணி திலக்மாரப்பனவுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து அவரின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சென்றசில நாட்களாக இவரை மோட்டார் சைக்கிளில் இருவர் பின்தொடர்ந்ததாகவும், இனம் தெரியாதவர்கள் நடமாட்டம் இவரின் வீட்டுக்கு அருகே அவதானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதனைத் தொடர்ந்து புலனாய்வுப் பிரிவினரும், பொலி

(06 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தளபதி ஜெரிடிசில்வாவை ஓரம்கட்ட அரசாங்கம் முயற்சி

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வாவை ஓரங்கட்டும் நடவடிக்கைகள் அரச உயர் மட்டத்தில் நடைபெறுவதாக ராவய சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவையும் நீக்கிவிட்டு இப்பதவிக்கு முன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்னாவை நியமிக்க முயற்சிகள் நடைப்பதாகவும் ராவய குறிப்பிட்டுள்ளது.

ஜெரி டி சில்வாவை நீக்கும் முயற்சிக்கு வட - கிழக்கு போரில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை என்பதும் இராணுவ அதிகாரிகளிடையே ஜெரி டி சில்வாவுக்கு நல்லபெயர் இல்லை என்பதும் காரணமாக கூறப்படுகிறது ஆனால் ஜெரி டி சில்வாவை நீக்க அரசு முயற்சிப்பதற்கு அவர் பௌத்தர் அல்ல என்பதே பிரதான காரணம் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுவதாக ராவய மேலும் தெரிவித்தது.

### திருவடிநிலை கடற் பகுதியில்

## பீரங்கித் தாக்குதலால் மீனவர் ஒருவர் பலி

சுளீபுரம் திருவடிநிலை கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலினால் ஒருவர் பலியானார். இருவர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

களங்கட்டிவலை பாய்ச்சி மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர் படகொன்றின்மீது நேற்று மாலை 4. 30 மணியளவில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டது. தாக்குதல் நடைபெற்றபோது மீனவர்கள் தமது கட்டுமரத்தை

(06 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. மாணவர்களால் விரிவுரைகள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

கலைப்பீட மாணவர்களது பகுதி - 2 பரீட்சை முடிவுகள் எட்டுமாத காலமாக வெளிவராததைத் தொடர்ந்து இறுதிவருடமாணவர்களால் விரிவுரைகள் அனைத்தும்நேற்றுபகிஷ்கரிக்கப்பட்டது

இப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்கள் விரிவுரை மண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சைமுடிவுகள் விரைவில் வெளியிடக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கலைப்பீட மாணவர்களின் பரீட்சை முடிவுகள் தாமதமாதல் தொடர்பாக கலைப்பீட மாணவர் ஒன்றியம் சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. இத்தீர்மானங்கள் கலைப்பீடாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன, இத்தீர்மானங்களின் அடிப்படையில் சில கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவற்றின் விபரம்வருமாறு:

1) உள்வாரி மாணவர்களின் பரீட்சை முடிவுகள் வெளிவர தாமதமானதால் பகுதி - 3 ற்குதோற்றிதொழில் சார், கல்விசார் நடவடிக்கைகளை தொடர இருக்கும் மாணவர்கள் பெரிதும் சிரமத்தை எதிர் நோக்குவதுடன் பொருளாதாரரீதியாகபெரும் நெருக்கடியை எதிர் நோக்குகிறார்கள் அத்துடன் மீள்பரீட்சைக்கு தோற்ற வேண்டிய மாணவர்கள் தம்மை தயார் படுத்த போதிய கால அவகாசம் இல்லாமலும் இருப்பதனால் பாதிக்கப்படுகின்றனர்

2) எமது பீட உள்வாரி மாணவர்களுக்கென வழங்கப் படுகின்ற வசதிகளும் வளங்களும் தற்காலத்தில் மிகவும் வரையறுக்கப்பட்டு இருப்பதால் புறநிலை படிப்புகள் அலகு மாணவர்கள், வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்கள் அவற்றைப் பயன்படுத்துவதால் எமது மாணவர்கள் அதனைத் தகுந்த முறையில் பயன்படுத்த முடியாமல் உள்ளது

மேற்கூறிய கருத்துக்களின்

(6 ஆம் பக்கம் பார்க்க

## பதவி விலக பணிப்பு

தகவல் இராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா தனது பதவியில் இருந்து விலக வேண்டும் என ஜனாதிபதி செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

இதனைத் தொடர்ந்து இவர் இவ் வார இறுதியில் தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பிப்பார் என எதிர் பார்க்கப்படுகின்றது.

## இன்று மூடப்பட்டிருக்கும்

இன்று அனைத்து குடும்ப அட்டை பகுதிச் செயலகங்களும் மூடப்பட்டிருக்கும் என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு குடும்ப அட்டை பகுதியினர் அறியத்தருகின்றனர்.

## வரி விளம்பரம்

**வீடு வளவு விற்பனைக்கு**

மட்டுவில் இருக்கணித நிலையத்திற்கு அருகாமையில் 5 பரப்புடன் அமைந்துள்ள கல்வீடு விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும்: ஸ்ரீ விஷ்ணு முகவர் கோட்டடி சாவகச்சேரி.
(8283)

**கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு**

இறைப்பு, சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு "மல்லிகாபதி" மானிப்பாய். (8133)

**தவறிவிட்டது**

11-5-94 அன்று இளாலியில் எனது அடையாள அட்டை (இல 682940298 V) தவறிவிட்டது இதைக்கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வி. சிவகரன் T.R.P ஏஜென்சி 65 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (8339)

**இறைச்சிக் கோழி**

புறொயிலர்கள், இறைச்சி சேவல்கள், இரண்டரைமாத Lohmann Brown பேடுகள், தடுப்பூசி இடப்பட்ட ஒரு மாத கறுப்புவெள்ளை சேவல்குஞ்சுகள், உயர்இன அடைமுட்டை விற்பனையாகிறது. அன்னை பூபதி கலையரங்க அருகில் யாழ் வீதி உரும்பராய்ச்சந்தி, (8343)

**ஆங்கிலம்**

தனிப்பட்ட முறையில் 9ம்: 10-ம் 11-ம், 12-ம் ஆண்டு வகுப்புகளுக்கான ஆங்கிலமும் ஆங்கில இலக்கிய வகுப்புகளும் 25-5-94 புதன்கிழமை ஆரம்பமாகின்றன. தொடர்பு சி முத்துக்குமாரன், பிள்ளையார் கோவிலடி, இணுவில் தெற்கு. (8337)


## சுகாதார வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம்-1 பகுதியில் உள்ள பாடசாலைகளில் இவ்வருடம் மே மாதம் 16 ஆம் திகதியில் இருந்து 21 ஆம் திகதி வரை சுகாதார வாரம் கொண்டாடப்படவுள்ளது.

இது தொடர்பாக பாடசாலைகளின் சுகநலம் பற்றிய விழிப்புணர்வை மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் மத்தியில் ஏற்படுத்தக்கூடிய கலை

தொழிலாளியை வேலை நீக்கிய

## உரிமையாளருக்கு எதிராக நீதிமன்று தீர்ப்பளிப்பு

(தென்மராட்சி)

நாவற்குழிப் பகுதியில் உள்ள ஒரு தனியார்மில்ஆலை ஒன்றில் பதினைந்து வருடங்களாகத் தொழில் புரிந்த தொழிலாளி ஒருவரைத் தக்க காரணம் எதுவுமின்றி வேலை நீக்கம் செய்த மில் உரிமையாளருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட தொழிலாளி செய்த முறைப்பாட்டை விசாரித்த நீதிமன்றம் வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த கடந்த ஆறு மாதங்களுக்கு, மாதமொன்றுக்கு 2000 ரூபா வீதம் தொழிலாளிக்கு வழங்கப்பட வேண்டுமென்றும், மீண்டும் வேலை வழங்கப்பட வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்தது. இது தொடர்பாக இத்தொழிலாளி தொழில் ரீதியாகப் பாதிக்கப்படக் கூடாதென்றும் நீதிமன்றம் உரிமையாளருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது (86)

## கட்டாக்காலி கால்நடைக்கு தண்டப்பணம் அறவிடப்படும்

முல்லை மாவட்டத்தில் பயிர்களை அழித்து தீங்கு விளைவிக்கும் கட்டாக்காலி கால்நடைகளுக்கு குற்றப்பணம் அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் விவசாய உத்தியோகத்தர்களுடன் நடத்திய விவசாய பாதுகாப்புசம்பந்தமான கலந்துரையாடலின்போதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இந்நடவடிக்கையை கமநல சேவை நிலையத்துடன் இணைந்து கிராம சேவகர் கண்காணிப்பார்கள்.

இதன்படி ஒரு மாட்டிற்கு பிடிகூலியாக 50 ரூபாவும் குற்றப்பணமாக 25 ரூபாவும் ஒரு ஆட்டிற்கு பிடி கூலியாக 25 ரூபாவும் குற்றப்பணமாக 25 ரூபாவும் அறவிடப்படவுள்ளது.


### புளொக் செய்வதற்கு நாடுங்கள்

- அச்சக வேலைக்குத் தேவையான காப்ரோன் புளொக்குகள் அனைத்தும் அழகிய முறையில் செய்து கொடுக்கப்படும்.
- பத்திரிகை விளம்பரம் மற்றும் அச்சக வேலைக்குத் தேவையான புளொக்குகளும் உடன் செய்து கொடுக்கப்படும்.
- ஸ்கிரீன் பிரிண்ட் வேலைக்குத் தேவையான பொசிடிவ்களும் உடனுக்குடன் எடுத்து தரப்படும்.

**அழகன் புளொக் தயாரிப்பாளர்கள்**
[ ஈழநாதம் அலுவலகத்திற்கு அருகில் ]
27/7, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
(9)




பின்வரும் அளவுகளில் எங்கும் விற்பனையாகிறது

**140 கிராம் 35/-    500 கிராம் 100/-**

தோடம்பழச் சுவையுடன் கூடிய

**ஃப்ரூட்டி மிக்சை**

(சி 9473) கேட்டு வாங்கி பருகி மகிழ்வீர்

### விற்பனைக்கு

கொழும்பு சீமெந்து, கற்பூரம்,
வாள்பிளேட், மோட்டார் சயிக்கிள் உதிரிப்பாகம்

யாவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்:

C. M. சுகந்தினி
309, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(8345)


தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன,
யாழ் மாவட்ட வர்த்தகப் பகுதி உதவிச் செயலர்

**அமரர் திரு. ஆ. குலசிங்கம்**

## பிரேமாவை உயிர்ப்பிக்க இப்போது முயற்சி

- ஒஸி அபயகுணசேகரா

(கொழும்பு)

கடந்த தென்மாகாணசபைக்கான தேர்தலின் போது மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் படம் கொண்ட ஐந்து லட்சம் சுவரொட்டிகளை அனுப்பி வைத்திருந்தால் ஐ.தே.க பெரும் வெற்றியைப் பெற்றிருக்கும் என்று சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவர் ஒஸி அபயகுணசேகரா தெரிவித்துள்ளார்.

பலப்பிட்டிய பகுதியில் அமரர் பிரேமதாசா நினைவுதின வைபவத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், பிரேமதாசாவின் ஐந்து லட்சம் சுவரொட்டிகளை அனுப்பி வைத்தால் ஐம்பதாயிரம் வாக்குகளால் வெற்றி பெறலாம் அனுப்பாது விட்டால் ஒன்றரை லட்சம் வாக்குகளால் தோற்க நேரிடும் என்று நான் சுட்டிக்காட்டியதை அன்று ஐ.தே.க தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார். மறைந்த பிரேமதாசாவிற்கு மீண்டும் உயிர் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்காக தென்மாகாண மக்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் எனவும் கூறினார்.

## கடற்றொழிலாளர்கள் இன்னலில் வாழ்கின்றனர்

**அங்குரார்ப்பண கூட்டத்தில் உரை**

'போர்ச் சூழல் காரணமாக தமிழ்க் கடற்றொழிலாளர்கள் மிகப்பெரிய கஷ்டத்துக்கு ஆளாகியுள்ளனர். கடினமாக உழைத்து தமது வாழ்வை மகிழ்ச்சிகரமாக நடத்திவந்த வடபகுதி கடற்றொழில் சமூகம் இன்று கடலிலே கால் வைப்பதற்குக் கூட அச்சங்கொண்டு உயிரைப் பணயம் வைக்கும் நிலையில் தமது குடும்பத் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது'

யாழ் மாவட்ட மீன்பிடி இலாகா பிரதி அதிபர் திரு. இலங்கநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொக்குவில் மேற்கு J.125 கிராம சேவகர் பிரிவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட கொக்குவில் கடற்றொழிலாளர் கூட்டுறவு அபிவிருத்திச் சங்க வைபவத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

திரு. இலங்கநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

'ஒருவர் பலருக்கும், பலர் ஒருவருக்கும் உதவுவதே கூட்டுறவின் அடிப்படை அம்சம் அந்த நோக்கில் நாம் செயற்படுவோமாகில் பல இன்னல்களை எதிர் கொண்டு வாழ்வில் வெற்றியைக் காண முடியும்' இவ்வாறு அவர்தெரிவித்தார்.

கொக்குவில் மேற்கு விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு. சந்தோசம் பேசுகையில்:

'கடல்வளம் எமது தமிழீழத்தின் மிக முக்கியமான பகுதி இதன் அவசியம் உணரப்பட்டதின் காரணமாக 'கடல் வளம்' என்ற பெயரில் எமது தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்டு தொழில் நுட்பவல்லுனர்கள் பலரின் ஆற்றலுடன் கடற்றொழில் கலங்கள், உபகரணங்கள் போன்றவற்றை நாமே தயாரிக்கின்றோம் அரசின் பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் எமது கடல் வளத்தை எமது மக்களின் உறுதி மிக்க உழைப்போடு பயன்படுத்தி கடற்றொழில் சார்ந்த மக்களின் பல்வேறு நலன்களுக்கும் உதவுமுகமாக உழைத்து வருகின்றோம் போர் ஓர் புறமும், எமது உணவுத் தேவை மறுபுறமுமாக எமது நடவடிக்கைகள் ஓரளவு கைகூடி வருகிறது' என்றார்.

கொக்குவில் மேற்கு கிராம சேவகர் திரு: சிவபாலனும் வைபவத்தில் உரையாற்றினார். [21]

## பருத்தித்துறையில் பேரீஞ்சு மரம்

(பருத்தித்துறை)

குடத்தனையில் உள்ள 6-ம் கட்டை நாகநாதன் தோட்டத்தில் பேரீஞ்சு மரமொன்று நன்கு வளர்ந்து காய்த்து பழங்களைத் தந்து கொண்டிருக்கின்றது. சுமார் 18 அடி உயரமாக வளர்ந்துள்ள இம் மரம் தற்போது தான் முதன் முதலில் காய்த்து பழுத்திருக்கின்றது. இப்பகுதியில் எங்கும் இதுவரை பேரீஞ்சு மரம் வளர்ந்து பழத்தைத் தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (25)

விழி புணர்வை மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் மத்தியில் ஏற்படுத்தக்கூடிய கலை நிகழ்ச்சிகள், சிரமதானங்கள், கண்காட்சிகள், கருத்தரங்குகள் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

எனினும் இந்நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலையொன்றில் விசேட நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

(பா)

## 'மகவம்' சந்திப்பு

'மகவம்' இலக்கிய வட்டத்தின் 41-வது சந்திப்பு இன்று உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், கந்தன் கனியமுதம் இசை நாடகம் அறிமுகம், வைகறை வில்லிசை விருந்து, கறைபடிந்த நாட்கள் நாடகம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்ச்சியில் வித்துவான் க. சொக்கலிங்கம், இயலிசைவாரிதி ந. வீரமணிஐயர் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

## முடிவு திகதி நீடிப்பு

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்களை சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான இரண்டாவது பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி மேலும் ஒரு வாரம் நீடிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை ஜூன் 4ஆம் திகதி நடைபெறும் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இரண்டாவது பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுத்திகதி 15-5-94 எனக் குறிப்பிட்டு 13-5-94 என முன்னதாக சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன.


## தேவை (TENT)

நல்ல நிலையிலுள்ள கூடாரம் (Tent) தேவை.

தொடர்பு:-

விள, இல, 333, மே/பா, ஈழநாதம்
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(8340)



யாழ் மாவட்ட சி. க. கூ. ச. சமாசம்

## பதவி வெற்றிடம்

பதவி: நிதிமுகாமையாளர்

வயது: 25 – 45 வரை

(கூட்டுறவு பணியாளர்களுக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது)

சம்பள அளவுத்திட்டம்: 104 (8)

$\frac{1305}{60\times4} - \frac{2370}{75\times11}$

படிகள் 800 + 314 + 860 + 481.50 வழங்கப்படும்.

குறிப்பு: யாழ் மாவட்டம் முழுவதும் வேலை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்

மேலதிக விபரங்கள், விண்ணப்பப் படிவங்கள் ஆகியவற்றிற்கு சமாசக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 30 - 05 - 94

தலைவர்

182 1/4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். யா.மா சி.க.கூ.ச.சமாசம் யாழ்ப்பாணம்.

(சி-9474)




யாழ் மாவட்ட வர்த்தகப் பகுதி உதவிச் செயலர்

## அமரர் திரு. ஆ. குலசிங்கம்

அவர்களுக்கு எமது

## இதய அஞ்சலி



நாட்டு விடுதலை நெஞ்சிலே ஏந்திய
நற்குணத் தொண்டன்
பூட்டு விலங்கெனும் தடைகளை உடைத்திட
தன்னையே தந்தோன்
பொருண்மிய வளர்ச்சியில் ஏற்றம் கண்டிட
எழுந்த அணியினிலே
வருவன தெரிந்து வளங்களைக் குவித்திட
வகைகளைக் காட்டி நின்றோன்
நித்திய சாவைத்தந்து சிரித்திடும்
ஒளி இவனரங்கம்
வர்த்தகப் பகுதியின் வளர்ச்சி கண்டிட
உழைப்பைக் கொட்டியவன்
பழகுதற்கினியன் பண்பினில் சிகரம்
பசுமையே இவனிதயம்
மறுக்களே இல்லா மாசுகள் அற்ற
வாழ்வே உன் வாழ்வு
பொறுத்திடமுடியாத் துயருடனுங்கள்
நினைவினில் நனைகின்றோம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(சி 9475)


திதின் மிக முக்கியமான பகுதி இதன் அவசியம் உணரப்பட்டதின் காரணமாக 'கடல் வளம்' என்ற பெயரில் எமது இதுவரை பேரீஞ்ச மரம் வளர்ந்து பழத்தைத் தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(25)


## நினைவு கூருகின்றோம்...

## 21.05.1994

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்-குருநகர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

லெப், வாசன் (மாணிக்கவாசகர் குவீந்திரராசா- புன்னாலைக்கட்டுவன் வடக்கு-யாழ்)

1988ஆம் ஆண்டு மட்டு - சந்திவெளிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

2-ம் லெப், அலன் (வேலாயுதம் மனோகரன் - சந்திவெளி – மட்டு)

வரதன் (வேலாயுதம் வேல்நாயகம்:சந்திவெளி-மட்டு)

1989ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

❋ வேலுச்சாமி சிவராசா (மரப்பாலம்-மட்டு)

1990ஆம் ஆண்டு யாழ் - நீர்வேலியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த,

சுபி (அப்பையா விக்கினேஸ்வரன் - இருபாலை கிழக்கு கோப்பாய் - யாழ்)

1991ஆம் ஆண்டு யாழ் - தச்சன்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

சிந்தரன் (முத்துலிங்கம் சேதீஸ்வரன் - நல்லூர் வடக்கு - யாழ்)

1992ஆம் ஆண்டு மணலாறு - முந்திரிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவக் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய,

கப்டன் குட்டிமணி அலேசியஸ் (தங்கப்பன் உதயகுமார் - களுவாஞ்சிக்குடி - மட்டு)

லெப், செங்கோன் குணாளன் (தங்கராசா சிவகுமார் - அல்வாய் வடக்கு - பருத்தித்துறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

❋ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

(இ-9469)

மன்றம்
யாழ்ப்பாணம்

அரச எழுதுநர் சேவைக்கும்
அதனோடிணைந்த சேவைகளுக்கும்
அரச கூட்டுத்தாபன எழுதுநர் பதவிக்கும்
ஆட்சேர்ப்பதற்கான

**பொதுப்**
**போட்டிப் பரீட்சை - 1994**

மேற்படி பரீட்சைக்கான விபரங்கள் 20-05-1994 திகதி அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 17-06-1994 ஆகும். இதற்கான பரீட்சை 25-08-1994 ல் நடைபெறவுள்ளது.

வட மாகாண விண்ணப்பங்கள் மாத்திரம் பதிவுத் தபால் மூலம் அரசாங்க அதிபருக்கு அனுப்பப்படல் வேண்டும். வர்த்தமானி கிடைத்ததும் மாதிரி விண்ணப்பப் படிவம் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

இலங்கை நிர்வாக சேவைக்கான பரீட்சை 04-06-1994-ல் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பிரவேசப் பத்திரம் பரீட்சை ஆணையாளரால் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு.கா.மாணிக்கவாசகர் அவர்கள் அறிவித்துள்ளார்.

(சி-9467)

# கூரேயைபோல செல்லச்சாமியும் பதவி விலகினால் என்ன?

## தொண்டமான் கேட்கிறார்

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியின் சிறிசேன கூரே கட்சித் தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க தனது பொதுச் செயலாளர் பதவியை இராஜினாமாச் செய்தது போல், இ-தொ-கா- பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி தனதுபதவியை இராஜினாமா செய்தால் என்ன? இவ்வாறு இ. தொ. காவின் தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

இரத்தினபுரியில் இ. தொ. கா. அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில், மந்திரி என்றால் என்ன? வேறு எவராக இருந்தால் என்ன? தவறு செய்திருந்தால், துரோகம் இழைத்துஇருந்தல் அவர்கள் தண்டிக்கப்பட்டேயாக வேண்டும் சிறிசேன கூரேயை பின்பற்றி செல்லச்சாமியும் தனது பதவியை இராஜினாமா செய்தால் செல்லச்சாமிக்கு அனுதாபம் காட்ட இ. தொ. கா. தயார் செல்லச்சாமியும், மத்திய மாகாணசபை உறுப்பினர்களில் எட்டுப்பேரும் இ-தொ-கா- தேசிய சபையினதும், செயற்குழுவினதும் தீர்மானத்தை எதிர்த்து செயற்பட்டனர்- தம் தவறை உணர்ந்து செயற்பட்டால் இவர்களை அனுத பத்துடன் அணுக முடியும் எனவும் தெரிவித்தார்.

## தமிழ் விழா

யாழ் திருமறைக் கலாமன்றம் இம்மாதம் 23, 24, 25 ஆம் திகதிகளில் தமிழ் விழா வைத் தமதுஅரங்கில் நடாத்த உள்ளார்கள். இந்நாட்களில் சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள், வில்லுப்பாட்டு, கருத்துரைகள், நடனம், நாடகம் ஆகியவை நடைபெற உள்ளன. ஔவையார், கும்பகர்ணன் ஆகிய நாடகங்களும் இடம்பெற உள்ளன. (17

# முகாம்களில் வேலை செய்ய ராணுவம் வற்புறுத்து

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பில்தம்பிலுவில் திருக்கோயில் விநாயகபுரம் பொத்தானை போன்ற பிரதேசங்களில் வசிக்கும் மக்களை தமது முகாம்களில் வேலை செய்யும்படி சிறிலங்கா இராணுவத்தினர் நிர்ப்பந்திக்கின்றனர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது; துப்புரவாக்குதல் சமையல் வேலைகள் போன்றவற்றை செய்யும்படி இராணுவத்தினர் இப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்களை வற்புறுத்தி வருகின்றனர். வேலை செய்ய வராதவர்கள் இராணுவ முகாம் அமைப்பதற்குத் தேவையான சீமெந்து பக்கற் ஒன்று அல்லது கிராமசேவையாளர் கூரைத்தகடு ஒன்று அல்லது இராணுவம் கேட்கும் ஏதேனும் ஒரு பொருளை விலைக்கு வாங்கி சிட்டையுடன் தமக்குத் தரவேண்டும் என்றும் கட்டாயப்படுத்தி வருகின்றனர்

இவற்றை விலை கொடுத்து வாங்க முடியாத ஏழ்மை நிலையிலுள்ள மக்கள் இராணுவத்திற்கு கூலி இன்றி வேலை செய்யும் இக்கட்டான நிலையிலுள்ளனர்.

இவ்வாறு வேலை செய்ய வராதவர்களும் அதற்குப்பதிலாகப் பொருள்கள் வாங்கித் தராதவர்களும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவர் என இராணுவம் எச்சரித்துள்ளது.

# உதவி மதுவரி அத்தியட்சகர் பதவிக்கு பரீட்சை

உதவி மதுவரிஅத்தியட்சகர்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளுதல் சம்பந்தமான சுற்றறிக்கைகள் பிரதம பரிசோதகர்களுக்கும் மதுவரி உதவி ஆணையாளருக்கும் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவற்றின் பிரதிகளை கப்பலில் வருபவர்கள் மூலமாக அனுப்பி வைப்பதாகவும் மதுவரி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட மாட்டாது என்றும் பரீட்சை 28-05-94 இல் நடைபெறும்என்றும் பரீட்சை திணைககளத்தினால்அனுமதி அட்டைகள் தகுதியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படடுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிலுநர் ஆசிரியர் தெரிவு
போட்டிப் பரீட்சைக்கான

**பயிற்சி வகுப்புகள்**
ஆரம்பம 21 05.94 [பி.ப. 4 மணி]

விபரங்களை நேரில் பெற்றுக்கொள்ளவும்

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி - யாழ்.

(சி-9471)

தமிழ் ஆங்கில தட்டச்சு - சுருக்கெழுத்து வகுப்புக்கள்
அத்துடன் ஆங்கில வகுப்புக்கள்

ஆரம்பம்: 23 - 05 - 1994

விபரங்கட்கு :
**வட-இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி (கிளை)**
[ அன்னை பூபதி கலையரங்கம் அருகில் உள்ள செல்லத்துரை வீதியில் ]

உருபிராய் தெற்கு,
உருபிராய்.

(சி-9464)

# நியமனம் கிடைக்காதோர் விபரம் கோரப்படுகிறது

(வடமராட்சி)
கிராம அலுவலர் பதவிக்கு விண்ணப்பித்து போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி இதுவரை நியமனம் கிடைக்காமல் பட்டியலில் இருக்கும் பெயர்களில் சிலரது பெயர் விபரங்களைவடக்கு-கிழக்குமாகாண சபை அரச அதிபர் ஊடாகக் கோரியுள்ளது.

இதன்பிரகாரம் பருத்தித்துறை பிரதேச செயலர் அலுவலகத்தில் இருந்து 13 பேரது பெயர் விபரங்களையும், கரவெட்டி பிரதேச செயலர் அலுவலகத்தில் இருந்து 14 பேரது பெயர் விபரங்களையும் கோரியுள்ளது

மேற்குறித்தவர்களதுபெயர் விபரங்களைப் பிரதேச செயலகங்கள் அனுப்பிவைத்துள்ளன. (யோ)

யாழ் வணிகர் கழகம் விடுக்கும்

**முக்கிய அறிவித்தல்**

வகுப்புத்தொழிலாளர்களை வைத்து வேலை செய்யும் சகல வணிகப் பெருமக்களினதும் கவனத்திற்கு

வகுப்புதொழிலாளர்களின் தற்பொழுது நடைமுறையில் உள்ள கூலிப்பட்டியலில் இருந்து 50% கூட்டிக் கொடுப்பதாக கடந்த 05 04-94 06 04-94 ஆகிய தினங்களில் நடைபெற்ற கலந்துரையாடலில் தங்களுடன் கலந்துரையாடி ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டது

ஆகவே இன்றைய தினத்தில் இருந்து யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட மேற்படி வணிகப் பெருமக்கள் அனைவரும் இதை நடைமுறைப்படுத்தி கழகத்துடன் ஒத்துழைக்குமாறு கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

பொதுச்செயலாளர்
யாழ் வணிகர் கழகம்

(சி-9466)

**நூலக வளர்ச்சி நிதிக்காக**
பருத்திநகர் பெருந்திறல் சான்றோன்
சாண்டோ எம். துரைரத்தினம் அவர்களும் மாணவர்களும்
வழங்கும்

**வீரதீர செயல்கள்**


# வன்னியில் 2900 ஏக்கரில் கால்நடை மேய்ச்சல் தரை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமானது வன்னி வட்டத்தில் அரச செயலகத்துடனும் கால்நடை சுகாதார திணைக்களத்துடனும் இணைந்து பரவலாக மேய்ச்சல்தரைகளை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது.

இதற்காக இரணைமடு, அக்கராயன்குளம் ஊற்றுப்புலம், வன்னேரி, பிரயந்தனாறு, கல்மடுநகர், சுடலைக்குளம, சூரியபுரம், மாயவனூர், கனகாம்பிகைகுளம் ஆகிய இடங்களில் மொத்தமாக2900ஏக்கருக்குமேய்ச்சல் தரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ் கிளைத் தலைமையகம்
**பதவி வெற்றிடம்**
(தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆசிரியர்)

விண்ணப்பதாரி தமிழில் விசேட சித்தியும், ஆங்கிலம், கணிதம் உட்பட க. பொ. த. (சா / த) ஆறு பாடங்களில் சித்தியும் பிற்மன் தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தில் அங்கீகரிககப்பட்ட நிறுவனத்தில் சித்தியெய்திய சான்றிதழுடன் மேற்படி கற்பித்தலில் அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும் விண்ணப்பங்கள் 31-05-94க்கு முன்பாக செஞ்சிலுவைச் சங்க யாழ்.



- நெருப்பு புதைகுழியில் சில மணி நேரம் படுத்திருத்தல்
- இரண்டு உழவுஇயந்திரத்தை எதிர் எதிராக உடலில் ஏற்றுதல்
- அதிபாரம் கொண்ட லொறியை மார்பில் ஏற்றுதல்
- ஓடும் மோட்டார் சயிக்கிள் இரண்டினைதொண்டையினால் இழுத்து நிறுத்துதல்
- 35Kg நிறையுள்ள குண்டை 7 அடி உயரத்திலிருந்து வயிற்றில் போடுதல்
- அதிபாரம் கொண்ட கல்லை நெஞ்சில் வைத்து உடைத்தல்
- 3'' ஆணி படுக்கையின் மேல் படுத்து உழவுஇயந்திரத்தை மார்பின் மேலேற்றுதல்
- வெறும் உடலின் மேல் உழவு இயந்திரத்தை ஏற்றுதல்
- வாயினால் மோட்டார் சயிக்கிளை தூக்குதல்

மற்றும் பல வீரதீர செயல்களும் இடம்பெறும்

**காலம் : 21-05 94 சனிக்கிழமை இரவு 7 மணி**

**இடம் : யாழ்/வட்டு இந்துக்கல்லூரி மைதானம்**

**அன்பளிப்பு : ரூபா 25, 50, 100, 250, 500, 1000**

குறிப்பு : பார்வையாளருக்கான விசேட அரங்க வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விளம்பர அன்பளிப்பு :

**சிற்றி பாதணி அகம்**

140, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(8384)

நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது

தரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

## சாரணிய தலைவர் பயிற்சி இம்முறை வடக்கிலும்

வடபகுதியில் முதன் முறையாக சாரணிய பயிற்சி பெற்ற தலைவர்களுக்கான உயர் பயிற்சி, தரு சின்னப்பயிற்சிகள் நடைபெறவுள்ளன. கைதடி நவீல்ட் பாடசாலையில் குருளை சாரணர் தலைவருக்குரிய தரு சின்னப் பயிற்சி ஆகஸ்ட் 10 முதல் 16 வரையிலும் சாரணர் தலைவருக்குரிய தரு சின்னப்பயிற்சி ஆகஸ்ட 18 முதல் 26 வரையிலும் நடைபெறும்

இதுவரை இப்பயிற்சிகள் மீரிகம, நுவரேலியா பீதுரு ஆகிய இடங்களிலேயே நடைபெற்றுவந்தன. கிளிநொச்சி,பருத்தித்துறை, யாழ்ப்பாண உதவி மாவட்ட ஆணையாளர்கள்சாரணியபிரதம ஆணையாளரிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து இம்முறை முதன் முறையாக வட பகுதியில் நடைபெறுகிறது

## துணைவேந்தர் நியமனம்

(கொழும்பு)

பேராசிரியர் நந்ததாச கோதாகொட கொழும்பு பல்கலைக்கழகத்தின் புதிய துணை வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியின் சிபார்சின் பேரில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இந்நியமனத்தை வழங்கியுள்ளது. முன்னாள் துணைவேந்தர் ஜி. எல் பீரிஸ் பதவியை இராஜினாமா செய்து சுதந்திரக் கட்சியில் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆண்டுவிழா

மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் 40-வது ஆண்டு நிறைவையொட்டி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பரிசளிப்பும் வீடியோ படக் காட்சியும் நாளை ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

மும் பெற்றிருத்தல் வேண்டும் விண்ணப்பங்கள் 31-05-94க்கு முன்பாக செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பத்திற்கான செய்முறைப் பரீட்சை 05-06-94 முற்பகல் 10.00 மணிக்கு கிளைத் தலைமையகத்தில் நடைபெறும்.

(பரீட்சார்த்திகள் தமது தட்டச்சு இயந்திரத்தை கொண்டு வருதல் வேண்டும்)

73, கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.
18 05-1994

செஞ்சிலுவைச் சேவையில்,
கௌரவ செயலாளர்.
(சி-9461)

# 7ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தாயின் மடியில்
22-12 1956



தாயக மீட்பில்
20-05-1987

## லெப். கேணல் ராதா

**(கனகசபாபதி ஹரிச்சந்திரா)**

(முன்னாள் மன்னார் மாவட்டத்தளபதியும், யாழ் மாவட்டத் தளபதியும்)

செந்தமிழ் ஈழத்தின் செழுமை தனைச் சிதைத்து-எம்
செங்குருதியினை குடிக்க நினைக்கும்
சிங்களப் படைகளின் இன வெறி அடக்கிட
செங்களமாடிய சிறுத்தைப்புலியே- எங்கள் ராதாவே
மண்ணின் விடுதலைக்காய் மாவீரர் ஆன உம்மை
எண்ணி நாம் ஏற்றம் கொள்வோம்
எழிலான நம் தேசம் மீட்போம்

சிவன் வீதி,
உரும்பிராய்.

(சி-9470)

-அண்ணன்
மாத்தளை

## கல்வித்தேர்வு பெறுபேறு மதிப்பீடு செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)

நடந்த ஐந்து வருட காலத்தில் கல்வித்தேர்வு பெறுபேற்றில் கண்டுள்ள ஏற்றத்தாழ்வுகளை மதிப்பீடு செய்யும் முகமாக க. பொ. த. (சா/த) மற்றும் (உ/த) வகுப்புத் தேர்வுப் பெறுபேறுகள் பகுப்பாய்வு செய்யப்படவுள்ளன.

இதன் அடிப்படையில் பொருத்தமான கல்வி அபிவிருத்தித் திட்டங்கள் முன் வைக்கப்படவுள்ளன. இதற்கான புள்ளி விபரங்கள் பெறுவது தொடர்பான படிவங்கள் யாழ் வலயம் - 1 ஐச் சேர்ந்த முதன்மை ஆசிரியர்கள் ஊடாகப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இவ்வேலைகளை வலயம் ஒன்று முதன்மை ஆசிரியர்கள் நிறைவு செய்யவுள்ளனர். (பா)

## இராணுவ அதிகாரிகளுடன் செஞ்சிலுவையினர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலிப் படைத்தளத்துக்கும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் விஜயம் செய்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினர் அங்கிருந்து திரும்பியுள்ளனர்.

இக்குழுவினர் பலாலிப் படைத்தளத்தில் தங்கியிருந்த சமயம் இந்த இராணுவ முகாமின் உயர் இராணுவ அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்.

## விஞ்ஞா.கற்பித்தல் சாதனம் எடுத்து வரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞான பாடத்தை இலகுவாக மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு ஏதுவாக கற்பித்தல் சாதன அட்டவணைகளின் மாதிரிகள் 10 இறக்குமதி செய்யப்பட்டு நல்லூர் கல்விக் கழக நடுவகப் பணியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

க.பொ.த சாதாரண தரம் க.பொ.த உயர் தர வகுப்புகளில் விஞ்ஞான பாடத்தை கற்பிப்பதற்கு தேவையான கற்பித்தல் மாதிரிகளே இவைகளாகும். இவ்வகுப்புகளுக்கு விஞ்ஞான பாடத்தினை கற்பிக்கும் ஆசிரியர்கள் இவற்றை பார்வையிட்டு தங்களது கல்லூரிகளுக்கு தேவையானவற்றை வரும் 24 ம் திகதிக்கு முன் எழுத்து மூலம் பணியகத்தில் விண்ணப்பிக்குப்படியும் இத்திகதிக்கு பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு அட்டவணைகள் வழங்கஇயலாத சூழ்நிலை ஏற்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ச,சி)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
03-07.1949



உதிர்வு:
10.06.1992

**அமரர் சரவணமுத்து தங்கராசா**
(வேல்வீதி, மயிலிட்டி)

திதி: 21.05.1994

எம் உயிரே எம் ஐயாவே
அறிவு பல புகட்டி எமக்கு ஆசானாக இருந்தீர்கள்

# வலி. வடக்கு பகுதியில் மக்கள் நடமாட தடை?

## இராணுவம் புதுக்கட்டுப்பாடு விதிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கில் இராணுவத்தினரின் பிடியில் சிக்கியிருக்கும் மக்கள் மீது இராணுவத்தினர் புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்

மாதகல், இளவாலை, வசாவிளான் போன்ற பகுதிகளில் உதிரியாக ஆங்காங்கே தங்கியிருந்த மக்கள் மீதே படையினர் இவ்வாறு புதிய கட்டுப்பாடுகளையும், கெடுபிடிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அனைவரும் தற்பொழுது இளவாலை கன்னியர் மடத்திற்குச் சென்று தங்குப்படி படையினர் பணிப்புரை விடுத்துள்ளனர். உணவு சமைப்பது, உணவு அருந்துவது, உறங்குவது எல்லாமே இந்தக் கன்னியர் மடத்திலேயே நடைபெறுகிறது. தினசரி இரண்டு மணித்தியாலங்கள் மட்டுமே மேற்படி பகுதியில் இருந்து மக்கள் வெளியே நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளனர். அண்மையில் மாதகலில் கண்ணிவெடியில் சில இராணுவத்தினர் சிக்கிக் கொண்டதினால் இரண்டு படையினர் சொல்லப்பட்டும் பலர் காயமடைந்ததையும் தொடர்ந்து இப்புதிய கட்டுப்பாடுகளைப் படையினர் விதித்துள்ளனர்.

மேற்படி பகுதியில் தங்கியிருக்கும் மக்களில் பலர் சித்தசுவாதீன மற்றவர்களாகக் காணப்படுகின்றனர். நேற்று இப்பகுதிகளில் இருந்து விடுதலையாகியவர்களில் சிலர் இவ்வாறு சித்தசுவாதீன மற்றவர்களாகக் காணப்பட்டனர்.

### மலேரியாவினால் பாதிப்புற்ற வடமராட்சிகிழக்குப்பகுதியில் மலத்தீன் தெளிப்பு இல்லை

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதிக்கு சுகாதாரத்திணைக்களத்தால் வழங்கப்பட்ட மலத்தீன்பற்றாக்குறையினால் மலேரியாவினால் மிகப் பாதிப்படைந்துள்ள பகுதிகளுக்குக்கூட மலத்தீன் அடிக்கப்படவில்லை இதனால் இப்பகுதி மக்கள் பலத்த விசனம் தெரிவித்துள்ளதுடன் மலேரியாவினால் பாதிக்கப்பட்டுள்ள இப்பகுதிகளுக்கு மலத்தீன் அடிப்பதற்கான உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவசர கோரிக்கையையும் யாழ். சுகாதாரத்திணைக்களத்திற்கு விடுத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கின் சகல பகுதிகளிலும் மக்கள் மலேரியாவினால் பீடிக்கப்பட்டு பலத்த அவஸ்தைகளுக்குள்ளாகி வருகின்றனர் இந் நிலையிலே வடமராட்சிகிழக்கில்வத்திராயன், தாளையடி, உடுத்துறைப்பகுதிகளுக்கும் கற்கோவளம் வராத்துப்பனை போன்றபகுதிகளுக்கும் மலத்தீன் அடிக்க வேண்டிய அவசியம்இருந்தும் மலத்தீன்அடிக்கப்படவில்லை. இதற்குக்காரணம் மலத்தீன் இல்லை எனக்கூறப்பட்டது அண்மையில் கப்பலில் வந்த மலத்தீனில் யாழ் மாநகரசபைக்கு 100 பெட்டிகளும் சாவகச்சேரிக்கு 100 பெட்டிகளும் வழங்கப்பட்டுள்ள போதும் மலேரியாவின் கடும் தாக்கம் உள்ள பகுதியான வடமராட்சி கிழக்கு உட்பட வடமராட்சிப் பகுதிக்கு 50 பெட்டி மலத்தீன் மட்டுமே சுகாதாரத்திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது. வடமராட்சி கிழக்குப் பகுதிக்கும் மலேரியாவின் தாக்கத்திற்குள்ளாகியுள்ள ஏனைய வடமராட்சியின் பகுதிகளுக்கும் 400 பெட்டி (400X30 = 12000 KG) மலத்தீன் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது இதற்கான நடவடிக்கைகளைச் சுகாதாரத்திணைக்களம் மேற்கொள்ளவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (25)

### கட்டுரைப் போட்டி நடத்த ஏற்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரி பொன்விழாவையொட்டி வடமராட்சிப் பகுதி பாடசாலைகளின் உயர் வகுப்பு மாணவர்களுக்கிடையே கட்டுரைப் போட்டியை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை பொன் விழாச் சபை மேற்கொண்டுள்ளது. (25)

### மணவாளக்கோல திருவிழா

(பருத்தித்துறை)

தென் புலோலி அருள்மிகு புற்றளை சித்திவிநாயகர் ஆலய மனவாளக் கோலத் திருவிழா நாளை மறுநாள் நடைபெறுகின்றது (25)

### பால் விற்பனைவுக்கு புதிய திட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் வீடுகளுக்குப் பால்கொண்டுசென்று விற்பனைசெய்யும் புதிய திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தவுள்ளது. தற்போது அலுவலகத்தில் நடைபெறும் பால் கொள்வனவு விற்பனை நடவடிக்கைகளின் அபிவிருத்தி முயற்சியாகவே வீடுகளுக்குப் பால் கொண்டு சென்று விற்பனை செய்யும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. (25)

### விநாயகபுரம் கடைகள் படையினர் மூடினர்

(அக்கரைப்பற்று)

அம்பாறை மாவட்டம்விநாயகபுரம் பகுதியிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் சிறிலங்கா படையினர் மூடியுள்ளனர். இதனால் இப்பகுதி மக்கள் தமது அன்றாட தேவைக்கான நுகர் பொருட்களுக்கு கூட அக்கரைப்பற்று தம்பிலுவில் திருக்கோவில் போன்ற நகரப் பகுதிகளுக்கு செல்லவேண்டி ஏற்பட்டுள்ளது எனினும் இப்பகுதி மக்கள் தமது தேவைக்கான பொருட்களை மொத்தமாக கொள்வனவு செய்து எடுத்துக் செல்வதற்கும் இராணுவம் தடை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### பாடசாலைக்கு புதிய மண்டபம்

(வடமராட்சி)

இமையாணன் அ. த. க. பாடசாலைக்கு ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா செலவில் புதிய மண்டபம் ஒன்றை பழைய மாணவர் சங்கம் நிர்மாணித்துக் கொடுத்துள்ளது. மண்டபத் திறப்பு விழா பழைய மாணவர் சங்கத் தலைவர் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளர் திரு. மா. பரமானந்தம் தலைமையில் விரைவில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (யோ)

### சான்றிதழ் வழங்கல்

பருத்தித்துறை இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளையில் தையற் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும், 4ஆவது தையற் பயிற்சி ஆரம்ப விழாவும் நாளை மேற்படி நிலையத்தில் பருத்தித்துறை கிளைத் தலைவர் பேராசிரியர் வீ கே. கணேசலிங்கம் தலைமையில் காலை 9-30 மணிக்கு நடைபெறும். (யோ)(25)

### மரநடுகைபோட்டி ஓராண்டு நிறைவு

(வடமராட்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடாத்தப்படும் மரநடுகைப் போட்டித் திட்டத்தின் ஓராண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பும் இன்று பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை பெண்கள் உயர்தரக் கல்லூரியில் நடைபெறும். யோ)

### வடமராட்சியில் விமான நோட்டம்

(வடமராட்சி)

குண்டுவீச்சு விமானங்கள் வடமராட்சிப்பகுதியை இரவு பகலாக பலமணி நேரம் வட்டமிட்டு நோட்டமிட்டன.

இரவு வேளையில் உலங்கு வானூர்தியும் பகல் நேரத்தில் அவ்ரோ விமானமும் இப்பகுதியை பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டன.

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன் தினம்பகல் 10 50மணியளவில் தொண்டமானாறு பகுதிக்கு விரைந்து வந்த அவ்ரோ விமானம் அப்பகுதியை சிலமணிநேரம் வட்டமிட்டது பின்னர் இவ்விமானம்தனது நோட்ட வீச்சை அகல வட்டமிட்டவாறு அதிகரித்துவல்வெட்டித்துறை திக்கம், பொலிகண்டி, பருத்தித்துறை, கற்கோவளம், நெல்லியடி, வல்லை ஆகிய பகுதிகள் உள்ளடங்கலாக ஒருமணித்தியாலத்திற்கு மேலாக வட்டமிட்டது. இதனையடுத்து கடை சந்தைப் பகுதிகளில் நின்ற மக்கள் பாதுகாப்புக் கருதி ஓடினர். (யோ)

### இசையாராதனை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் மிருதிகா பிருந்தாவனம் இசையாராதனை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் 159/A கோவில் வீதி நல்லூரில் நடைபெறவுள்ளது.

## மீண்டும் மலேரியா பரவும் அபாயம்

# மலத்தீன் கைவசம் வந்திருந்தும் இன்னும் தெளிக்க ஏற்பாடு இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் மலேரியாநோய் தீவிரமாக பரவ ஆரம்பித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இப்பரவலைக் கட்டுப்படுத்துவதில் ... களில் இது தீவிரமாகப் பரவ ஆரம்பித்துள்ளதுடன் கடந்த சில நாட்களில் 30ற்கு மேற்பட்டோர் இந்நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்நோய் பரவல் குறித்து ... தான உண்மைக் காரணம் எனத் தெரியவந்துள்ளது.

இம்மாத இறுதிவரை பயன்படுத்துவதற்கென கடந்த மாதம் கொழும்பிலிருந்து 250 பெட்டி மலத்தீன் ...

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அறிவு பல புகட்டி எமக்கு ஆசானாக இருந்தார்கள்
அன்பினாலே குழைத்தெடுத்து எமை ஆளாக்கி விட்டீர்கள்
ஆல மரமாய் எம் அனைவருக்கும் நிழல் தந்தீர்கள்
இன்னும் சிலகாலம் வாழ்ந்திருக்க வொட்டாது
காலன் கைபட்டு கணப் பொழுதில் மறைந்து விட்டீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீராமரை பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் வாடும்,
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

இணுவில் கிழக்கு,
இணுவில்;

(8338)



மண்மாதா கழலில்:
11-09-1920

விண்மாதா நிழலில்:
22-04-1994

## அமரர் கந்தையர் நாராயணசாமி

[கம்பர்மலை, வல்வெட்டித்துறை]

அன்புடனே அநுதினமும் ஆசை மொழி
மொழிந்தவரே
எம்மைவிட்டு நீண்டதூரம்
சென்றதேனோ சொல்லும் ஐயா
பண்புடனே பலகாலம் பாசமழை பொழிந்தவரே
பாரைவிட்டு பலகாதம் பறந்து சென்றதேனோ
அவனியிலே அவலமாய் எம்மைவிட்டு மறைந்துபோன
அன்பு நிறை அம்மா, அக்கா, அத்தான்,
தம்பியர், தங்கைதனை,
கவனித்துப் பாசமழை பொழிந்திடப் போனாயோ
கண்ணீர்நிறை கண்களிலே உன்நினைவே
வாழுதையா.

எங்கள் தந்தையாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்க்கும், அநுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், மற்றும் பலவகைகளிலும் உதவி செய்த யாவர்க்கும் எமது நன்றிகள்.

மேலும் 22-05-1994 (ஞாயிறு) நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும்படி உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:

நா. புகழேஸ்வரன்
கனோஜி வீதி,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

(8329)

## 5-வது ஆண்டு நினைவு வணக்கம்



## அமரர் முத்துவேலு துரைரெத்தினம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12-06-1938 | 17-05-1989 |

திதி : 22-05-1994

ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
உங்கள் நினைவுகள் மட்டும் மறையாது.

தங்களை பாசத்துடன் நினைவு கூரும்
- குடும்பத்தினர்

ஊறணி,
வல்வெட்டித்துறை. (சி-9472)

படுத்துவதில் அதிகாரிகள் எவரும் எதுவித அக்கறையும் காட்டாதிருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு, பசிலைப்பள்ளி, கொடிகாமம், அரியாலை போன்ற இடங்களில் மலேரியா நோய் பரவி வருவதுடன் தற்போது சுந்தரோடை, சங்குவேலி, சண்டிலிப்பாய், சாவக்காடு பகுதி

இந்நோய் பரவல் குறித்து அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளபோதிலும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இது குறித்து கிடைத்த தகவல்களின்படி இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரமுடைய அதிகாரிகள் மத்தியில் நிலவும் கருத்து முரண்பாடுகளே தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருப்பதற்

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும் இன்று வரை இவற்றில் எதுவுமே பயன்படுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் மலேரியா தடுப்பு நடவடிக்கைக்கு பொறுப்பான அதிகாரி கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க முற்பட்ட போதும் உயர் அதிகாரி அதற்குத் தடை விதித்துள்ளதாகவும் அறியவருகிறது.

(ச, தி)

## பக்தி இசை நிகழ்ச்சி

(குருநகர்)

'மூவொரு இறைவனை வாழ்த்துவோம்' என்னும் பக்தி இசை நிகழ்ச்சி நாளை மாலை 6 மணிக்கு யாழ். மரியன்னை பேராலய திறந்த வெளி அரங்கில் நடைபெற இருக்கிறது. (21)

## வேட்டைத் திருவிழா

(கொழும்புத்துறை)

தொல்புரம் மத்தி கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்பாள் கோவில் 9ஆம் திருவிழா வேட்டைத் திருவிழா இன்று சனிக்கிழமை மாலை 7 30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து நடைபெறும்.

நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன் பிரம்ம ஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் 'மகாபாரதம்' தொடர்சொற்பொழிவும் இடம்பெறும்.

(24)

## ஏகாதசி அபிஷேகம்

(கொழும்புத்துறை)

பொன்னலை அருள் மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் இன்று மாலை 3.00 மணிக்கு ஏகாதசி விசேட அபிஷேகம். பூசை ஆராதனை வழிபாடுகள் நடைபெறும். (24)

## ஆசிரியர் தினம் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

வருடா வருடம் ஒக்டோபர் ஆறாம் திகதி கொண்டாடப்படுகின்ற ஆசிரியர் தினத்தை ஒட்டி சிறப்பாக யாழ் மாவட்டத்தில் செயற்படும் ஆசிரியர்களுக்கு யுனிசெப் நிறுவனம் சான்றிதழ்களையும் பதக்கங்களையும் வழங்க தீர்மானித்துள்ளது.

இதற்கமைய யுனிசெப் நிறுவனம் மாகாண மட்டத்தில் 25 சான்றிதழ்களையும் மூன்று வெண்கலப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப்பதக்கத்தையும் வழங்க தீர்மானித்துள்ளது

இது தொடர்பாக சுற்று நிருபமொன்றை வலயத் திணைக்களங்களிற்கு யுனிசெப் நிறுவனம் அனுப்பி வைத்துள்ளது.

இவ்வாசிரியர் தெரிவுகள் ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்கான திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

(பா)

## முல்லை மாவட்டத்தில் சீதன ஒழிப்புப் பிரசாரம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சீதன ஒழிப்புப் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால் வட்டவை ரீதியாக இச் சீதன ஒழிப்புப் பிரசாரம் நடத்தப்பட்டு வருகிறது. புதுக்குடியிருப்பு, முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி வட்டங்களில் மகளிர் மன்றங்களின் ஒத்துழைப்புடன் பிரசார கூட்டங்கள் நடாத்தப்படும். அதே வேளை சீதன ஒழிப்புத் தொடர்பான பதாகைகள் வீதிக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ளன. அத்துடன், சீதனம் என்னும் மாயை ஒழிப்போம் என்னும் வீதி நாடகமும், சீதன அம்புகள் என்னும் நாட்டிய நாடகமும் நடத்தப்பட்டு வருவதுடன் கொடியோரின் கொடுமை என்னும் வீடியோப் படப் பிரதியும் காட்டப்பட்டு வருகிறது.

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

நம்மை நாமே அறிய ஏடுகளைக் காட்டிலும் இன்னல்களே அதிகம் கற்றுத் தரும்.

- ஸர் ஜான் டேவிஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## உறுதியற்ற அரசியலும் தளம்பும் பொருளாதாரமும்

கடந்த 17 வருட காலத்தில் என்றும் இல்லாதவாறு சிறிலங்கா அரசியலில் ஸ்திரமற்ற தன்மை உருவாகியுள்ளது. இதன் காரணமாக சிறிலங்காவின் பொருளாதார நிலையும் தளம்பல் நிலை கண்டுள்ளதாக அரசியல், பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அரசியலில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற தன்மைக்கு, ஐ. தே. க. தனது சாதனையாகப் பறைசாற்றி வந்த பொருளாதாரம் தலைதூக்கமுடியாது தள்ளாடுகிறது. கடந்த மார்ச் மாதத்தில் இடம்பெற்ற தென் மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐ தே. கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியும், இதனால் இவ்வருட இறுதிக்குள் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சிக்கான வெற்றிவாய்ப்பில் ஏற்பட்டுள்ள சந்தேகமுமே காரணமாகும்.

இதேசமயம், இவ்வாறு உருவாகியுள்ள அரசியல் ஸ்திரமற்ற நிலை சிறிலங்காவின் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதித்துள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சிறிலங்காவில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படுமோனால் புதிய அரசின் பொருளாதாரக் கொள்கை பற்றி பெரும் கேள்வியுடன் உள்ளனர். சிறிய மாற்றங்களுடன் திறந்த பொருளாதாரக்கொள்கையே கடைப்பிடிக்கப்படும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி, குறிப்பாக மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா உறுதி அளித்திருப்பினும் எதிர்க்கட்சியின் கூட்டணியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இடதுசாரிக் கொள்கை உடையவர்கள் உள்ளமை குறித்து முதலீட்டாளர்கள் மத்தியில் தயக்கம் உள்ளது.

அத்தோடு, எல்லாளன்படை வெளிநாட்டு முதலீட்டாளருக்கு விடுத்துள்ள எச்சரிக்கையும், அந்நிய முதலீடுகளைக் கணிசமாகப் பாதித்துள்ளதாக அறிய முடிகின்றது ஹோட்டல்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து, கொழும்பின் பாதுகாப்பை அரசால் உறுதிப்படுத்த முடியாது என முதலீட்டாளர்கள் நம்புவதாகவும், இதன் காரணமாக புதிய முதலீடு

# 90இல் நடந்த கொலை பற்றி பொலிசார் விசாரணை

## சொத்தி உபாலி இரகசிய பொலிசாரிடம்

(கொழும்பு)

1990ம் ஆண்டு டிசம்பர் 12ம் திகதி பாதுக்க பொலிஸ் பகுதியில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டு டயர் போட்டு எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக தற்போது பாதுக்க பொலிசார் புதிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். தற்போது பொலிஸ் பாதுகாப்பில் இருக்கும் காடையர்குழுத் தலைவர் ஒருவர் தான் இக் கொலைக்கு பொறுப்பு எனக் கூறப்படுகிறது.

கத்தியால் குத்தப்பட்டு ஊனமாக்கப்பட்ட இவ் இளைஞர் டயர் போட்டு எரிக்கப்பட்டுசாகும்படி விடப்பட்டார் ஆனால் எரிகாயங்களுடன் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர் அங்கு வாக்குமூலம் அளிக்கையில் தான் யாரால் காயப்படுத்தப்பட்டார் என்பதை குறிப்பிட்டிருந்தார்எனினும் பின்னர் அவ்இளைஞர்மரணமடைந்துவிட்டார்.

இவ்வாறு அந்தக் காடையர்குழுத் தலைவரின் பெயர் தெரியவந்த போதும், பொலிசார் அப்போது விசாரணைகளை தீவிரமாக்கவில்லை ஆனால் இப்போது அவர் கைது செய்யப்பட்டிருப்பதை அடுத்துபொலிசார் இவ்வழக்கு மீதானவிசாரணையை நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் ஆரம்பித்துள்ளனர்.

இதே வேளை சொத்தி உபாலி உட்படபொலிசாரால் கைது செய்யப்பட்ட பாதாள உலகைச் சேர்ந்தவர்கள் இப்போது இரகசியப் பொலிசாரால் ஆறாம்மாடியில் வைத்து விசாரிக்கப்பட்டுவருகின்றனர் சொத்தி உபாலி தற்போது பொரல்ல, பாதுக்க, நீர்கொழும்பு மற்றும் மீரிகான பொலிசாரால் அவ்வப்பகுதியில் நிகழ்ந்தகுற்றச் சம்பவங்களில் அவரது தொடர்பு குறித்து விசாரிக்கப்பட்டுள்ளார்.

# ஊழலும், கொடூரமும் மலிந்த நாடாக சிறிலங்கா இப்போதுள்ளது

## திருமதி சந்திரிக்கா கவலை

(கொழும்பு)

கொடூரம் இழைக்கப்படுவது தான் இன்றைய சிறிலங்கா சமூகத்தின் நியதியாக இருக்கின்றது. எனவே சரியாகச் சிந்திக்கும் ஒவ்வொரு குடிமகனதும் தலையாய கடமையாக சமூகத்தில் ஒழுங்கு மீள நிலைநாட்டப்படுவதாகவே இருக்கவேண்டும் இவ்வாறு பொதுசன மக்கள் முன்னணிப் பிரமுகரும்மேல்மாகாணமுதல் வருமான திருமதி சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

நாரஹேன்பிட்டி சிறி சம்புத்த ஜயந்தி விகாரையில் அண்மையில் நடைபெற்ற சமய நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் மது, சூதாட்டம், போதைப் பொருட்கள் போன்றவற்றுக்கு பல்வேறு மட்டங்களிலும் மக்கள் அடிமைகளாகியுள்ளநிலைமையே காணப்படுகிறது. மேல் வகுப்பினர் என்று தம்மை எண்ணிக் கொள்பவர்களினாலேயேசமூகத்தின் இன்றைய கெட்ட நிலைமைகள்தோன்றியுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் நாகரிக சமூகத்தால் ஏற்றுக்கொள்ள முடியாத ஊழலும் கொடூரமும் அண்மைக்காலத்தில் இங்கு மிகவும் பரவியிருப்பதாகவும் தெரிவித்தார்.

## வவுனியா, மன்னார், முல்லைத்தீவுக்கு

# இரத்தப் பரிசோதகர் இன்மையால் மலத்தீன் அனுப்ப வில்லையாம்

மலேரியா நோயைக் கண்டு பிடிக்கும் இரத்தப் பரிசோதகர் எவருமில்லாததால் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மலத்தீன் அனுப்பி வைக்கப்படுவதில்லை

மேற்படி இரத்தப் பரிசோதகர் இல்லாத காரணத்தினால் இம் மாவட்டங்களில் மலேரியா நோயைக் கண்டறியமுடிவதில்லை இதன் காரணமாக மலேரியா நோயே இந்த மாவட்டங்களில் பரவவில்லை என்று மலத்தீன் அனுப்பி வைக்கப்படுவதில்லை

இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா நகரப்பகுதி, மன்னார்த் தீவுப் பகுதி ஆகியவற்றில் நுளம்பை கட்டுப்படுத்துவதற்காக குறிப்பிட்டளவு மலத்தீன் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வழமையை விட குறைவாகவே கிளிநொச்சி மாவட்டத்திற்கு மலத்தீன் அனுப்பி வைக்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது (தி) (ச)

# சிறிபாத கல்வியியல்கல்லூரி மூடப்படும் நிலை வரும்?

(கொழும்பு)

மலையகத்தில் ஆரம்பிக்கப்பட்ட சிறிபாத கல்வியியல் கல்லூரி என்ற ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மலையகத்தில்தோட்டப்பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நீக்கவே இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாண்டுத் தொடக்கத்துடன் மூன்றாவது தொகுதி ஆசிரிய மாணவர்கள் இக் கல்லூரியில் அனுமதி பெற்றிருக்க வேண்டும். முதலாவது தொகுதி மாணவர் பயிற்சி முடிந்து சத்தித்தல் பயிற்சிக்காக வெளியேறிய பிறகு கல்லூரியில் இரண்டாவது, மூன்றாவதுதொகுதி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படாது கல்லூரி மூடிக் கிடக்கிறது ஏனைய கல்வியியல்கல்லூரிகள் திட்டமிட்டபடி இயங்கும் போது இந்தக்கல்லூரியை மட்டும் ஏன் மூடவேண்டும் என்று மலையகத் தமிழ் மக்களும், கல்விமான்களும் கேட்கின்றனர்.

# 650 சிற்றூழியருக்கு நிரந்தர நியமனம்

சுகாதாரத் திணைக்களம் மற்றும் போதனா வைத்திய சாலைகளில் கடமையாற்றும் 650 சிற்றூழியர் உடனடியாக நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

அரச திணைக்களங்களிலுள்ள அமைய ஊழியர்களை நிரந்தரமாக்கும்படி ஜனாதிபதி பணிப்புரை வழங்கியதை அடுத்தே அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது. நாளொன்றுக்கு 70 ரூபா சம்பளம் பெற்ற சிற்றூழியர் மாதம் 3000 ரூபாவுக்குக் குறையாத சம்பளத்தில் அமர்த்தப்படுவார்கள்.

# வலிகாமம் பகுதி வீடுகள் இராணுவத்தினரால் தகர்ப்பு

(வடமராட்சி)

வலிகாமம் பகுதியில் சிறிலங்கா இராணுவம் நிலை கொண்டுள்ள பகுதிகளில் உள்ள கல்வீடுகள் இராணுவத்தினரால் குண்டுகள் வைத்து தகர்க்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினர் தமது பாதுகாப்புக் கருதி பல லட்சம் ரூபா பெறுமதியான பல வீடுகளை தரைமட்டமாக்கி வருகின்றனர் அதி சக்தி நிறைந்த குண்டுகளை பயன்படுத்தி அப்பகுதி வீடுகள் தகர்க்கப்பட்டு வருவதாகவும், குண்டுகள் வெடித்து வீடுகள் தகர்க்கப்படும் போது கடுமையான புகைமண்டலம் காணப்படுவதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (யோ)

## புலிகளின்குரல் நிகழ்ச்சி நிரல்

**1994.05.21- சனி இரவு**

08.01- அறிவியற்களஞ்சியம்
08.10- தாயகப் பாடல்கள்
08.25- நேயர் கடிதங்கள்
08.30- செய்திகள்
08.40- லெப்ரினன்ட் வாசன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''மரணமோர் புதுப்பிறப்பு''.

**1994.05.22 ஞாயிறு காலை**

07.02- மாவீரவணக்கம்
07.15- களத்தில் மலர்ந்தவை
07.30- செய்திகள்
07.35- பத்திரிகைச் செய்திகள்
07.40- களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# கள்விற்பனையில் வீழ்ச்சி

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் தென்னை பனம்பொருள் உற்பத்தி நிலையத்தில் இந்த மாதம் கள் விற்பனை மிகவும் வீழ்ச்சி அடைந்திருப்பதாக தெரிய வருகிறது.

இப்பகுதியில் 12,000 போத்தல் கள் தினசரி உற்பத்தியாகின்ற போதும் சராசரி 3500 போத்தல்களே தினமும் விற்கப்படுவதாக கூறப்படுகிறது. (86)

கின்றது ஹோட்டல்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து, கொழும்பின் பாதுகாப்பை அரசால் உறுதிப்படுத்த முடியாது என முதலீட்டாளர்கள் நம்புவதாகவும், இதன் காரணமாக புதிய முதலீடுகள் செய்வதற்கு அவர்கள் தயக்கம் காட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறாக, உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதில் காட்டும் தயக்கமும், பங்குச் சந்தை வர்த்தகத்தில் காணப்படும் பெரிய அளவிலானதான தளம்பலும் பொருளாதாரத்தில் பாதிப்பையும், நிச்சயமற்ற தன்மையையும் கொண்டுவந்துள்ளது.

முதலீடு, பங்குச் சந்தை வர்த்தக வீழ்ச்சி என்பன இவ்வாறு பொருளாதாரத்தை ஒருபுறம் பலவீனப்படுத்த மறுபுறம் தேர்தலைக் குறியாகக் கொண்டு அரசாங்கம் அறிவித்துவரும் பெரும் சலுகைத் திட்டங்கள் திறைசேரிக்குப் பெரும் சுமையை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கத்தின் இவ் அறிவிப்புக்களால், திறைசேரியின் திரவ நிலை பாதிக்கப்படுவதோடு பெரிய அளவிலானதான பணவீக்கமும் ஏற்பட வாய்ப்புண்டு எனத் திறைசேரி வட்டாரங்களே கருதுகின்றன. இவற்றை சமாளிப்பதென்பது பெரும் சிரமம் எனக் கூறுகின்றன.

இதேசமயம், அரசாங்கம் அறிவித்துள்ள சலுகைத் திட்டங்களினால் ஏற்பட்டுள்ள செலவீனங்களை சமாளிக்கவென 15 பில். ரூபா நோட்டுக்களை அச்சிடும் நிர்ப்பந்தம் அரசிற்கு ஏற்பட்டுள்ளதாக பொருளியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது. இது தவிர அரசிற்கு வேறுவழி இல்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறாக சிறிலங்காவின் பொருளாதாரம் தத்தளிப்பதற்கான முழுப் பொறுப்பையும் ஆளும் ஐ.தே. கட்சியே ஏற்க வேண்டும். இன்றுள்ள இப் பொருளாதார நெருக்கடிக்கு முதலீட்டாளர்கள் தயக்கம், பங்குச் சந்தை வர்த்தக வீழ்ச்சி, சலுகைகள் அறிவிப்பு எனப் பல காரணங்கள் கூறப்பட்டிருப்பினும் இவை யாவற்றிற்கும் அடிப்படையானது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாமையே ஆகும். இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட்டிருந்தால், இதுவரையில், சிறிலங்கா பெற்றுக் கொண்ட வெளிநாட்டு உதவி, கடன் என்பனவற்றின் மூலம் நல்லதொரு பொருளாதார நிலையை உருவாக்கியிருக்க முடியும். பல்லாயிரம் கோடி ரூபா போர்ச் செலவை மக்கள் நலனுக்கு செலவிட்டிருப்பின் இன்றைய சலுகை அறிவிப்புக்கள் தேவைப்பட்டிருக்காது. தொடர்ந்து அந்நிய முதலீடுகளை எதிர்பார்த்திருக்கும் அபாயம் தோன்றியிருக்காது.

கர் இல்லாத காரணத்தினால் இம் மாவட்டங்களில் மலேரி

மன்னார் தீவுப் பகுதி ஆகிய வற்றில் நுளம்பை கட்டுப்

பட்டது (தி) (ச)

முடிவிக்கப்படுவதாக கூறப்படுகிறது, (86)

# தமிழக சாதனைகளை பரப்ப ஜெ. டி. வி. ஆரம்பிக்கலாம்?

## மாநில அமைச்சர் தென்னவன்

ஜெயலலிதா அரசின் சாதனைகளை ஒளிபரப்ப வசதியாக தமிழக அரசின் சார்பில் ஜெ.டி.வி என்ற அமைப்பை ஏற்படுத்துவது பற்றி பரிசீலிக்கப்படுகிறது என்று செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் தென்னவன் கூறியுள்ளார்.

சட்டசபையின் கேள்வி நேரத்தில் இது பற்றித் தெரிவித்த அமைச்சர் தென்னவன் மேலும் கூறுகையில், சென்னை தொலைக்காட்சி நிலையம் சென்னையில் இருந்தாலும் அதன் கட்டுப்பாடு டில்லியில் இருக்கின்றது தமிழக அரசின் சாதனைகளை இந்த நிலையம் இருட்டடிப்பு செய்து வருகிறது டி.வி. இருட்டடிப்பு செய்தாலும் முதல்வரின் சாதனைகளை சிதைக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

# அமெரிக்க அதிபருடனான பேச்சு பயனுள்ளதாகவே அமைந்தது

## : இந்தியப் பிரதமர் நரசிம்மராவ்

(வாசிங்டன்)

அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனால் நடாத்தப்பட்ட பேச்சுக்கள் ஆக்கபூர்வமானதாகவும், பயனுள்ளதாகவும், வெளிப்படையானதாகவும் இருந்ததாக இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

வெள்ளை மாளிகையில் அதிபர் கிளிண்டனுடன் பேச்சுகள் நடாத்திய பின்னர் அதிபர் கிளிண்டனுடன் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் நரசிம்மராவ் மேலும் கூறுகையில், இப் பேச்சுக்கள் இரு நாடுகளுக்குமிடையிலான பரஸ்பர பொருளாதாரப் பிணைப்புக்களுக்கு வழிவகுக்கும் எனவும் தெரிவித்தார்.

மிகுந்த நட்புச் சூழலில் இடம் பெற்ற இப் பேச்சுக்களின் போது உலகின் கவனத்தை ஈர்த்துள்ள பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை அணு ஆயுத பரவல் தடுப்பு விவகாரம், மனித உரிமைப் பிரச்சினை போன்றவை இந்தியாவுக்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான ஆக்கபூர்வமான உறவுகளுக்கு தடையாக இருக்காது என்று அமெரிக்க அதிபர் பில்கிளிண்டன் இச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

காலத்தில் பயிர்தட்டு

ஞாலத்தில் உயர்வடைவோம்

# எம்.ஜி.ஆரின் சிலை சிறை வைக்கப்பட்டுள்ளது

## - எஸ். திருநாவுக்கரசு

(சென்னை)

தனது வாழ்நாளில் ஒரு தடவை கூட சிறைக்குப் போகாதவர் அமரர் எம்.ஜி.ஆர். இன்று அவரது முழு உருவச் சிலையை சிறையில் அடைத்துள்ளனர் இவ்வாறு எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் எஸ் திருநாவுக்கரசு தமிழக சட்டசபையில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் ஈரோட்டில் எம்.ஜி.ஆர். முழு உருவச் சிலை வைக்கப்படுவதற்காக வெண்கலத்தால் உருவாக்கப்பட்டது. இச் சிலையை வைப்பதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அதிகாரிகளுக்கும் மனுச் செய்யப்பட்ட போதும், ஒரு மாதத்திற்கும் மேலாக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அனுமதி கிடைக்கவில்லை.

இந் நிலையில்தான் கட்சியின் மாவட்ட செயலாளர் வீட்டிற்குள் அத்துமீறிப் புகுந்த பொலிசார் எம்.ஜி.ஆர் உருவச் சிலையை கடத்திச் சென்றுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இதே வேளை குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் எஸ்.டி சோமசுந்தரம் அமரர் எம்.ஜி.ஆர் பல்வேறு போராட்டங்களிலும் ஈடுபட்டு சிறைக்கு சென்றிருக்கிறார் என்று தெரிவித்தார்.

# இலங்கைதூதுவரகம் எதிரே காங்கிரசார் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நேற்று முன்தினம் சென்னையில் இலங்கைத் தூதுவரகத்திற்கு எதிரே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது இந்திரா காங்கிரஸ் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரான தனுஷ்கோடி ஆதித்தன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

# ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது

காரைநகர் ப.நோ.கூ. சங்கத்தின் கிராமிய வங்கி மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான வைகாசி மாதக் கொடுப்பனவு வழக்கம்போல் கிராமிய வங்கி அலுவலகத்தில் வைத்து இன்று காலை வழங்கப்படவுள்ளது.

# வெற்றிடத்திற்கு ஏற்ப மாணவரை பல்கலையில் அனுமதிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் அனுமதி வழங்கக் கூடிய அதி உச்ச எண்ணிக்கையான மாண வர்களுக்கு அனுமதி வழங்குவ தற்கு நடவடிக்கை எடுக்கும் படி யாழ். பல்கலைக் கழகத் தின் புதிய துணைவேந்தர் குணரட்ணம் உயர் கல்வி அமைச்சைக் கேட்டுள்ளார்.

ஒவ்வொரு பல்கலைக் கழக கல்வி ஆண்டுக்கும் மாணவர் களை அனுமதிப்பது தொடர் பாகவும், வெற்றிடங் களை நிரப்புவது தொடர்பாகவும் துணை வேந்தரினால் உயர் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மகஜரிலேயே இவ் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது. யாழ். பல்கலைக் கழகத்தில் உள்ள ஒவ்வொரு பீடத்திலும் மாணவர்களுக் கான வெற்றிடங்கள்உள்ளன. இவ் வெற்றிடங்கள் முழுமை யாக நிரப்பப்படுவதில்லை. இதனால் பல மாணவர்கள் உயர் கல்வி வாய்ப்பை இழக் கின்றனர். தற்போது நடை முறையில் இருக்கும் பல்கலைக் கழக அனுமதி முறையும், வெட்டுப் புள்ளித் திட்டமும் இதற்கு காரணமாக அமைந் துள்ளன.

வெட்டுப் புள்ளியைக் குறை த்து பல்கலைக் கழக அனுமதி யை அதிகரிப்பதன் மூலம் பல் கலைக் கழகத்தில் உள்ள மா ணவர்களுக்கான வெற்றி டத்தை நிரப்ப முடியும். இவ் வாறு தற்போது உள்ள பல்க லைக் கழகத்துக்கு மாணவர் களை அனுமதிக்கும் திட்டத் தில் உள்ள சில குறைபாடுக ளும் இம் மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. (க)


யாழ் ஸ்ரீதரில்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து வழங்கும்

மண்ணுக்காக

நடிகர்கள்:
தேவர் அண்ணா, கணேஸ், கலையரசன்
அமரசிங்கம்
பிரியா பூரணா

மழலைத் தாரகைகள்:
சி. சிவரஞ்சனி சி. சிவநிரஞ்சனா
மற்றும் பலர்

படப்பிடிப்பு & படத்தொகுப்பு:
றியோ (நிதர்சனம்)

நிழல் படம்: நகுலேஸ் (அர்ச்சுனா)
பாடல் ஒலிப்பதிவு: கிருபா (நிதர்சனம்)

பாடியவர்கள்:
விஜயன் - வேஜின் மேரின்

மூலக்கதை: வல்வையூரான்
இசை: முரளி

பாடல், படக்கதை, உரையாடல்:
நெறியாள்கை
பொன். கணேசமூர்த்தி

தினசரி மாலை 3.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு காலை 10.30 மணி,
மாலை 3.00 மணி, 6.00 மணி

(சி-9457)


## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஜொலிஸ்ரார் விளையாட் டுக் கழகம் நடத்தும் மட்டுப் படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற் றுப் போட்டியின் முதலாவது சுற்றில் இன்று காலை ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொக்கு வில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 'பி' அணி விளையாடவுள்ளது.

மாலைப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து 'சப்றா' விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

காலைப்போட்டி 8-30 மணிக்கும் மாலைப்போட்டி 1-00 மணிக்கும் ஆரம்ப மாகும்.

## வீரவணக்க கூட்டம்

வடமராட்சி வட்டம் பருத் தித்துறை கோட்டத்தில் 5-ம் மாதங்களில் வீச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக் கக் கூட்டம் இன்று இரவு 7.30 மணிக்கு மந்திகை குரும்பசிட்டி வைரவர் கோயி லடியில் நடைபெறும். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள் ளன.

## உதைபந்தாட்ட போட்டி

அளவெட்டி விநாயகர் வி. கழகம் மகாஜனக் கல்லூரி யின் இணுவில் மைதானத்தில் நடாத்தும் உதைபந்தாட்ட போட்டியின் இன்றைய போட்டிகள் இரண்டாம் பிரிவு கால்இறுதி ஆட்டத்தில்பொற் பதிவி. கழகத்தை எதிர்த்துசத் தியா வி கழகமும் முதலாம் பிரிவு அரைஇறுதி ஆட்டத்தில் ஞானமுருகன் வி.க. எதிர்யங்கிற யல் வி கழகமும் மோதஉள்ளனஇப்போட்டிகள் மாலை 3.30மணிக்கு ஆரம்ப மாகும்.

## கரபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசா லைகள் விளையாட்டு அபிவி ருத்திக் குழு நடத்தும் யாழ் மாவட்டப் பாடசாலைகள் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாவது நாள் போட்டிகள் இன்று முத்துத்தம்பி மகாவித்தியா லய விளையாட்டு மைதான த்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில், 17 வயதி ற்கு உட்பட்ட பிரிவில் யூனி யன் கல்லூரி எதிர் சென் ஜோன்ஸ் கல்லூரியும் 19 வயதுப் பிரிவில் கனகரத்தி னம் ம.ம.வி எதிர் நடேஸ் வராக் கல்லூரியும் விளை யாடவுள்ளன.

முதலாவது போட்டி பிப 3-00 மணிக்கு ஆரம்பமா கும்.

டி பிக்கு

சாரும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

## பொன்னுக்காகப் பெண்ணை வதைக்காதே

பரீட்சை

அடிப்படையில் எமது மாண வர்கள் எமது ஒன்றியத்தின் ஊடாக பின்வரும் கோரிக்கை களை முன் வைக்கின்றனர்.

1) அனைத்துவருட மாண வர்களது பரீட்சை முடிவு களும் அவர்கள் பரீட்சைக் குத் தோற்றி தொடர்ந்து வரும் நான்கு மாதங்களினு ள்ளும், அனைத்து வெளிவாரி மாணவர்களது பரீட்சை முடி வுகள் வெளிவர முன்னரும் வெளியிடப்பட வேண்டும்.

2) புறநிலை படிப்புக்கள் அலகினால் நடாத்தப்படும் விரிவுரைகள் அனைத்தும் எமது பல்கலைக்கழக வளா கத்திற்கு வெளியே நடாத் தப்பட வேண்டும்.

3) வெளிவாரி பட்டப்படி ப்பு மாணவர்களுக்காகநடாத் தப்படும் விரிவுரைகள் அல் லது கருத்தரங்குகள் எமது பல்கலைக்கழக வளாகத்திற்கு வெளியேநடாத்தப்படவேண் டும்.

பீரங்கித்

விட்டு கடலில் குதித்தபோது கட்டுமரத்தின்மீது வீழ்ந்து வெடித்த பீரங்கி குண்டினல் கட்டுமரம் சிதறியது அதை அடுத்து கம்புகளின் உதவி யுடன் கரையை அடைய முய ற்சித்துக் கொண்டிருந்த வேளை விழுந்த பீரங்கி குண்டொன்று வெடித்ததில் ஆறுமுகம் நவரட்ணம் (வயது 42) என்பவர் மரண மடைந்ததாக அவருடன் தொ ழிலுக்கு சென்ற மற்றைய மீன வர்களான பாலகிருஷ்ணன் மதனகோபால், பொன்னுத் துரை விநாயகமூர்த்தி ஆகி யோர் தெரிவித்தனர். இறந் தவரது உடல் இவர்களால் மீட்கப்பட்டு யாழ் போதனா மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதே வேளை சுளிபுரம் கரையோரப் பகுதியில் பீரங்கி குண்டு வீழ்ந்து வெடித் ததாகவும் மக்கள் சிதறி ஓடியதாகவும் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது [சி]

## கண்டெடுப்பு

இணுவில் வீரமணிஐயர் என்பவரது மூக்கு கண்ணாடி, வாகன அனுமதிப் பத்திரம் என்பவை கண்டெடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

பல்கலை

டங்களுக்கு வெளியே அமர் ந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

பரீட்சை முடிவுகள் வெளி வராததையிட்டும் வேறு சில கோரிக்கைகளை முன் வைக் கும் விரிவுரைகளை தொடர் ந்து பகிஷ்கரிப்பதற்கு இம் மாணவர்களால் தீர்மானிக் கப்பட்டுள்ளது (தி)

பிரதமர்

தனது நடவடிக்கைகளுக்கு எதிராக இருப்பவர்களை தான் எப்படி விசுவாசியாக நம்ப முடியும் என டி. பி. அமைச்சர்களிடம் கேட்ட தாக தெரிய வருகின்றது.

ரணிலுக்கு

துப் பேச்சுவார்த்தை நடத் தியதாகவும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோதும் இதில் கலந்து கொள்ள வில்லை எனவும் தெரியவரு கிறது.

கல்வித்

சகல வலய கல்விப் பணிப்பா ளர்களும் தத்தம் பிரதேசத்தி லுள்ள பிரதேச கல்வி அலுவ லகங்களுக்கிடையே மேற் குறி த்த பணியாளர்களை தாமாக இடமாற்றம் செய்வதை நிறு த்திக் கொள்ள வேண்டும் எனவும் சுற்று நிருபத்தில் கூறப்பட்டுள்ளது. ஊழியர் ஒருவரை இடமாற்றம் செய்ய விரும்பினல் அது குறித்த சிபார்சு வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சிற்கு அனுப் பப்படல் வேண்டும் எனவும் அதன் பின்னர் அங்கிருந்து இடமாற்றம் செய்யப்படும் எனவும், தெரிவிக்கப்படுகிறது. எனினும் அவசியமான நேரங் களில் ஒழுங்காற்று நடவடிக் கையின் பேரால் செய்யப்ப டும் இடமாற்றங்களுக்கு இதி லிருந்து விலக்களிக்கப்பட் டுள்ளது.

சமூக

மேற்கொள்வதே இந்தப் பிர சார இயக்கத்தின் அடிப் படை நோக்கமாகும்.

தேசிய சுதந்திரப் போராட் டத்துடன் சமூக விடுதலையை யும் வென்றெடுப்பதே விடு தலைப் புலிகள் இயக்கத்தின் குறிக்கோளாகும். சமூக விடு தலை எனும்பொழுது சமூகத் தில் நிலவும் முரண்பாடுகளை யும், அநீதிகளையும் நீக்கி, சமத்துவமும், சமநீதியும் கொண்ட புதிய சமுதாயத் தைக் கட்டியெழுப்புவதைக் குறிப்பதாகும். இதன் அடிப் படையில், விடுதலைப் போரா ட்ட காலத்தில், சமூக சீர மைப்பை நோக்காகக் கொண்ட சீர்திருத்த நட வடிக்கைகளை மேற்கொள்ள புலிகள் இயக்கம் தீர்மானித் திருக்கிறது.

இன்று, தமிழீழ சமூகத் தில், சீதன முறையானது பெண் அடிமைத் தனத்தின் வெளிப்பாடாக ஒரு சமூக அநீதியாக உருவெடுத்திருக் கிறது. இந்தக் கொடுமை யால் பெண்ணினம் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக் கிறது. பெண்கள் மட்டுமின்றி, பெண்களைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் உள்ளடங் கியதாக எண்ணற்ற குடும் பங்கள் இப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளன. ஒட்டு மொத்தத்தில் இப் பிரச்சினை யானது, எமது சமூகம் எதிர் கொள்ளும் ஒரு சாபக்கேடாக எமது சமூக வாழ்வை சீர ழித்துவருகிறது. இந்தப் பிரச் சினை தொடர்ந்து நீடிக்கு மானால் எமது சமூகத்தின் ஒழுங்கமைப்பு சீர்குலைந்து எமது பண்பாட்டு வாழ்வும் சிதைந்துவிடும் பேராபத்தும் எழக்கூடும். எனவே, இப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் முறையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற் கொள்ளப்படுவது இந்தக் காலகட்டத்தின் அத்தியா வசிய தேவையாகும்.

சீதனக் கொடுமையானது நீண்ட நெடுங்காலமாக எமது சமூகத்தில் ஆழவேரூன்றிய ஒரு சிக்கலான பிரச்சினை யாகும். இதனை ஒழித்துக் கட்டுவதும் இலகுவான காரி யமல்ல ஆனால், மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்தால் இந்த சமூக அநீ தியை ஒழித்துக்கட்டுவது சாத்தியமாகும் எனவே, எமது விடுதலை இயக்கம் மேற்கொள்ளவிருக்கும் முற் போக்கான முயற்சிக்கு மக்கள் கைகொடுத்து உதவவேண்டு மெனக் கேட்டுக்கொள் கிறோம்.


விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகத்தின்

டும் இடமாற்றங்களுக்கு இதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

போக்கான முயற்சிக்கு மக்கள் கைகொடுத்து உதவவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.


# வெளிச்சம்

**வெள்ளி இதழ் விற்பனையாகின்றது**
**அதிக பக்கங்கள்! அழகான சித்திரங்கள்!!**
**காலத்தை உருவகிக்கும் கலைப் படைப்புகள்**



## கால நதிக்கரையில் மீள நினைக்கின்றேன்

**சுவையான தகவல்களுடன் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வெளிச்சத்திற்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி**




பிரம்மஞானி, பேராசிரியர் கா.சிவத்தம்பி, அடேல் ஆன், கவிஞர் இ. முருகையன், கலாநிதி நா. சுப்பிரமணியன், கலாநிதி சபா. ஜெயராசா, செ. கிருஷ்ணராசா, ப. புஸ்பரத்தினம், செல்வி யசோதா பத்மநாதன், மு. இராதாகிருஷ்ணன் ஆகியோரின் கட்டுரைகள்.

கவிஞர் காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை, சோ. பத்மநாதன், முருகையன், கருணாகரன், இளையவன், கல்வயல் வே. குமாரசாமி, வீ. பரந்தாமன், வளநாடன் மற்றும் உதயலட்சுமி, திருமாறன், அரசண்ணா இன்னும் பல போராளிகளின் கவிதைகள்.

சாந்தன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், செம்பியன் செல்வன் செங்கை ஆழியான், மலரன்னை, சு. மகேந்திரன், நாக. பத்மநாதன் ஆகியோரின் சிறுகதைகள்.

வண. பிதா பிரான்ஸிஸ் ஜோசவ் அடிகள், தமிழக 'சுபமங்களா' சஞ்சிகையின் ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் ஆகியோர்களுடனான நேர்காணல்கள்.

'காற்றுவெளி', 'மண்ணுக்காக' வீடியோப்படங்களுக்கான மதிப்பீடுகள் இன்னும் பல அம்சங்களுடன்

**நூற்றிஐம்பது பக்கங்கள்**

**விலை ரூபா: 50.00**

(சி-9468)


## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா நல்லையா

(உரிமையாளர் மலா ஸ்ருடியோ கிளிநொச்சி)

மட்டுவிலை பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா நல்லையா காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா, வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும், பிறேம்நாத், திருமதி மாலா குகதாசன் (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை), திருமதி கலாயோகேந்திரன் (கட்டடத் திணைக்களம் கொக்குவில்), திருமதி லதா சிவஞானம், ரகுநாத் (பொறியியல் பீடம் 1ஆம் வருடம் பேராதனைப் பல்கலைக்கழகம்), கோபிநாத் (மாணவன் கனகபுரம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீமதி, யோகேந்திரன் [இரசாயனப்பகுதி யாழ். பல்கலைக் கழகம்], குகதாசன் [தொழில்நுட்பவியலாளர்], சிவஞானம் [ஆசிரியர் கிளிநொச்சி] ஆகியோரின் மாமனாரும் அபிராமி, பகிரதி, சசிரேகா, தர்சிக்கா, லகுவனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 22-5-94 நாளை ஞாயிற்றுக்கிழமை 10-00 மணியளவில் 8A, கலட்டி அம்மன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

8A, கலட்டி அம்மன் வீதி,
கொக்குவில்.

தகவல்:
மு. யோகேந்திரன்
(மருமகன்)

[8346]

### சொக்கலிங்கம் கந்தையா

மாதகல் மேற்கை பிறப்பிடமாகவும் நுணாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்டவரான சொக்கலிங்கம் கந்தையா அவர்கள் 1994-05-18-ல் காலமானார். இவரது இறுதிக்கிரியைகள் 22-05-94 ஞாயிறன்று காலை 8.00 மணியளவில் நடைபெற்று தகனத்துக்காக சாவகச்சேரி கண்ணாபிட்டி மாயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ஜெகநாதன் வீதி, தங்கராசா (மகன்)
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (8347)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.